Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 25 (09 - 07 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 141

## கிராமப்புற மாணவர் எண்ணிக்கை குறையாது

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களைத்தெரிவு செய்வதில் கிராமப்புறங்களில் இருந்து பல்வேறு துறைகளுக்கும் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட மாட்டாதுஎன்று சிறிலங்கா கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலியும், கல்விச்சேவைகள் அமைச்சர்ரணில் விக்கிரம சிங்காவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காவின் நிதிப் பற்றாக்குறை; 4வது இராணுவப் படை அணி உருவாக்குவதில் தடங்கல்!

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் நான்காவது படைப்பிரிவை ஏற்படுத்துவதற்கான திட்டம் மோசமான நிதி நிலைமை காரணமாக தடைப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா இராணுவத்தில் தற்பொழுது மூன்று படைப் பிரிவுகள்உள்ளன நான்காவது படைப்பிரிவொன்றை ஏற்படுத்துவதற்காகமுன்னரேஎடுத்த முடிவை நிதிப்பற்றாக்குறை காரணமாகக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னாள்பாதுகாப்புஇணை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பலநூறு தொண்டர் ஆசிரியர் நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தொண்டர் ஆசிரியர்கள் நேற்று யாழ் நகர வீதிகளில் ஆர்ப்பாட்டஊர்வலமொன்றை நடாத்தினர்.

தற்போது இம்மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களை நிரந்தர நியமனமாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை துரிதப்படுத்தும்படி கோரும் மகஜர்கள் யாழ். அரசாங்க அதிபரிடமும், கல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா விரோதநடவடிக்கை; மலே. பொறியியலாளர் கைது

(கொழும்பு)

சிறிலங்கா அரசுக்கு விரோதமானநடவடிக்கைகளில் ஈடுபட்டார், என்ற குற்றத்தின் பேரில் மலேசிய பொறியியலாளர் மைக்கல் சியூ கொழும்பில் கைது செய்யப்பட்டார்.

மனித உரிமைகள், வெளிநாட்டு முதலீடுகள், பாதுகாப்பு மற்றும் சிறிலங்கா பொருளாதாரம் பற்றிய ஆவணங்கள் அடங்கிய பேழை ஒன்று அவர் வசமிருந்து பொலிஸ்விசேட பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து சிங்கப்பூருக்குப் பயணத்தை மேற்கொள்வதற்கு ஒரு சில மணி நேரங்களுக்கு முன் அவர் கைது செய்யப்பட்டதாகப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிவராஜனை தேடும் பொலிஸாருக்கு மயக்க வைக்கும் தோட்டா விநியோகம்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தேடப்படும் ஒற்றைக்கண்சிவராஜனையும், அவனது சகபாடியான சுபாவையும் உயிருடன் கைது செய்ய இந்தியப் பொலிஸ் பிரயத்தனம் செய்து வருகிறது.

மயக்கவைக்கும் தோட்டாக்களைக் கொண்ட துப்பாக்கிகள் இவர்களைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொலிசாருக்கு வழங்கப்பட்டு உள்ளது. இத்தகவலை மத்திய புலனாய்வுப் பிரிவு சென்னை அலுவலகம் தெரிவித்துள்ளது.

## மனித உரிமை தொடர்பை பல நாட்டு தூதுவர்களும் எம்மோடு பேசுகின்றனர் - பிரட்மன்

(கொழும்பு)

பிரித்தானிய உயர் ஸ்தானிகர் டேவிற் கிளட்ரோன் வெளியேற்றப்பட்டதற்கும் மனித உரிமைகள் சிறிலங்காவில் மீறப்படுவது பற்றி அவர் தெரிவித்த கருத்துக்கும் எவ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சேபால ஆலோசனைக்காக கொழும்பு திரும்பவுள்ளார்

(கொழும்பு)

லண்டனிலுள்ள சிறிலங்கா உயர் ஸ்தானிகர் ஜெனரல் டி சேபால ஆட்டிகல சிறிலங்கா அரசுடன் ஆலோசனை கலப்பதற்காக கொழும்பு திரும்பவுள்ளார்.

சிறிலங்காவுக்கான ஆயுத விற்பனை, நிதி உதவி, மற்றும்நல்லெண்ணப் பயணங்களை நிறுத்தியுள்ளதாக பிரித்தானிய அரசு கடந்த புதனன்று அறிவித்திருந்தது இவை தொடர்பாக ஆலோசனை கலப்பதற்காகவே உயர் ஸ்தானிகர் கொழும்பு வருகிறார்.

## ராஜீவ் கொலைத் தடயம் கொழும்பில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுண்ட குண்டுவெடிப்புக்கும், பாதுகாப்பு இராஜாங்கத் துறை அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா கொலையுண்ட குண்டு வெடிப்புக்கும், கூட்டுப்படை தலைமையலுவலகத்திற்கு முன்பாக நடந்த குண்டு வெடிப்புக்கும் தொடர்பு இருந்ததற்கான தடயங்களை கண்டு பிடித்திருப்பதாக சிறிலங்கா பொலிசார் கூறியுள்ளனர்.

சிறிலங்காப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளில் முக்கிய திருப்புமுனையாக இது கருதப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. கினிது வக்பிட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முற்றுகையிட முயன்ற ராணுவம் - புலிகள் மோதல்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றிவளைக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் மோதல் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவம் கடந்த மாதம் முப்பதாம் திகதியன்று திருமலை மாவட்டத்திலுள்ள கட்டைபறிச்சான் என்னுமிடத்தில் நடந்துள்ளதாகத் தெரியவருகிறது.

அன்றையதினம் கட்டை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### லெப். நிமால்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை மாவட்டத்தில் கட்டைபறிச்சான் பகுதியில் கடந்தமாதம் முப்பதாம் திகதியன்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் லெப். நிமால் (பொன்னையா புலேந்திரன், திருகோணமலை) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ராஜீவ் கொலை தொடர்பாக இலங்கைத் தமிழர் நேபாளத்தில் கைது

(காட்மண்டு)

நேபாளத்தில் இலங்கைத் தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை புதுடில்லியில் கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர்கள் இவரோடு தொடர்பு கொண்டு இந்தியப் பொலிசார் தேடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

(கண்டி)

மலை நாட்டிலும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வடகுதியைச் சேர்ந்த போராளிகள் மலைநாட்டில்பாதுகாப்பான இடங்களில் மறைந்து வாழலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

சந்தேகத்துக்கிடமானமுறையில் நடமாடுகிறவர்களைக் கைது செய்யுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## திலீபன் நடகள போட்டி; முடிவு திகதி நாளை

(யாழ்ப்பாணம்)

திலீபன் நினைவு தடகள விளையாட்டுப்போட்டிக்கான விண்ணப்பங்களை ஏற்கும் முடிவு திகதி நாளை 10 ஆம் திகதியாகும். வட்டார அலுவலகங்களிலும் விளையாட்டுப் பொறுப்பாளரிடமும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் அவற்றை பூரணப்படுத்தி நாளை புதன் கிழமைக்கு முன்னதாக ஒப்படைக்கவும்.

வட்டவை மட்டப் போட்டிக்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

நோயால்

# பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்த உதவிப்பணம்

(பருத்தித்துறை)

சமூகசேவைத் திணைக்களத்தால் காசநோய், தொழுநோய், புற்றுநோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்த உதவிப்பணம் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சமூகசேவை உத்தியோகத்தரால் வழங்கப்பட்டு வருகின்றது.

இம்மாதாந்த உதவிப்பணத்தைப் பெற்றுக் கொள்ளும் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் தமது பங்குனி, சித்திரை மாதங்களுக்கான உதவிப்பணங்களை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சமூக சேவை உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் சமூகசேவை திணைக்களத்தால் வழங்கப்பட்டுவரும் பொதுமாதாந்த உதவிப்பணம் அவ்வப்பகுதி தபால்நிலையங்களில் வழங்கப்பட்டு வருவதாகவும் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமூகசேவை உத்தியோகத்தர் திரு. எஸ். இராஜலிங்கம் தெரிவித்தார். (25)

# சு.கட்சி எம். பி. மீது கொலைக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொலை முயற்சிக் குற்றம் சாட்டப்பட்டு கடந்த வியாழனன்று மொனராகலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

காமினி விஜித்தா விஜெயமுனி (எம்.பி.) ஜூலை 1ஆம் திகதியன்று அப்பாக்கியால் சுட்டு கருணாரத்தின, ஜெயதிலக்கா ஆகிய இருவரைக் காயப்படுத்தியதாகவும், அவர்கள் வசமிருந்த தங்கச் சங்கிலியைப் பறித்ததாகவும் பொலிஸார் தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

எதிரியான காமினி விஜிந்தா ரூபா 1,500 ரொக்கப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

# கமநல உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு மாகாண கமநல சேவைத் திணைக்களம் பெரும்பாக உத்தியோகத்தர் தரம் - 2 பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பல்கலைக்கழகப் பட்டதாரிகள் அல்லது க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்திருப்பதுடன் விவசாயக் கல்லூரியில் பயின்று முதலாம் அல்லது இரண்டாம் தரத்தில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் பிரதிச் செயலாளர், காணி கமநல சேவைத் திணைக்களம் இலக்கம் 77, அருணகிரி வீதி, திருக்கோணமலை என்ற முகவரிக்கு இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய முறையில் அனுப்பி வைக்க வேண்டும். (ச)

## திறப்புவிழா

(பருத்தித்துறை)

யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு வடமராட்சிக் கல்விக்கோட்ட உபவள நிலையத் திறப்புவிழா பருத்தித்துறை, மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலையில் வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் இராசுந்தரலிங்கம், சிறப்பு விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், உதவிக் கல்விப்பணிப்பாளர் வடமராட்சிக் கோட்டம் எஸ். செல்லத்துரை, தொழில் நுட்பக்கல்வி அதிகாரி என். சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

## அதிபர்களுக்கான விண்ணப்பம் கோரல்

முதலாம், இரண்டாம் தர அதிபர் பதவிகளுக்கு ஆகஸ்ட் மாதம் 9 ஆம் திகதிவரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கப் பாடசாலைகளின் முதலாம், இரண்டாம் தர அதிபர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் கல்விச்சேவைகள் ஆணைக் குழுவினால் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் 9 ஆம் திகதி ஆகும்.

## 5 லட்சம் அடையாள அட்டைகள் ரத்து

(கொழும்பு)

1972, 1973ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஐந்து லட்சம் ஆள்அடையாள அட்டைகள் ரத்துச் செய்யப்படவுள்ளதாக ஆட்பதிவுத்திணைக்களம் அறிவித்துள்ளது.

## பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கூட்டம்

யாழ். மாவட்ட சகல பல நோ. கூ. சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான கூட்டம் இன்று (9.7.91) முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்திற்கு அனைவரையும் தவறாது சமுகம் கொடுக்குமாறு யாழ். மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளார்கள்.

(B/ 2794)

# ராம்தாஸ் கைது தொடர்பாக தமிழக தலைவர்கள் கண்டனம்

(சென்னை)

தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து தமிழக தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். அத்துடன் தமிழகத்தின் சிலபகுதிகளில் பதற்றமும் நிலவியது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையொன்றில் தேசிய முன்னணி, இடதுசாரிக் கூட்டமைப்பு கட்சிகளின் தலைவர்கள் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தணித்து சுமுகமான சூழ்நிலை உருவாவதற்கு தெரிவித்த யோசனையை ஜெயலலிதா அரசாங்கம் ஏற்காததாலேயே இந்த நிலைமை ஏற்பட்டதாகவும், ராம்தாஸ் கைது செய்யப்பட்டது அரசின் எதேச்சதிகாரத்தைக் காட்டுவதாக அமைகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

இதே காலத்தில் அறிக்கை வெளியிட்டுள்ள மாக்சிசம் யூனிக் கட்சியின் மாநிலக் குழுவின் செயலாளர் ஏ நல்லசிவம் ராம்தாஸ் கைது செய்யப்பட்ட இடத்தருகே நடைபெற்ற தடியடிப்பிரயோகத்தைக் கண்டித்தார்.

அண்ணா புரட்சித்தலைவர் தமிழக முன்னேற்றக்கழகத் தலைவர் திருநாவுக்கரசவும் டாக்டர் ராம்தாஸ் கைது செய்யப்பட்டது தமிழக அரசின் தன்னிச்சையான நடவடிக்கை என குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதே நேரம் சேலம் மாவட்டத்தில் ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வெளியார் மாவட்டத்தில் நூறு பேரும், தென்னார்க்காடு மாவட்டத்தில் 400 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்திற்கு அண்மையில் இயங்கிவந்த யாழ். உதவி அரசாங்க அதிபர் பணிமனை எதிர்வரும் வியாழக்கிழமை முதல் 201/1, 3ஆம் குறுக்குத் தெருவிற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது. இந்த இடமாற்றத்துக்கான ஏற்பாடுகளை யாழ் அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார். (ச)

## பத்திரிகைத்துறை மாணவர்களின் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்வி பத்திரிகைத்துறை மாணவருக்கான விசேட கூட்டம் ஒன்று வியாழக்கிழமை 11ஆம் திகதி காலை 9-00 மணிக்கு யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல பத்திரிகைத்துறை மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு தொழில் நுட்ப கல்வி அதிகாரி கேட்டுள்ளார். (ச)

## மேஜர் தயாபரனின் நினைவஞ்சலிக் கூட்டம்

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட முன்னாள் இராணுவப் பொறுப்பாளர் மேஜர் தயாபரனின் நினைவு தினம் நாளை மறுதினம் திகதி கல்மடு பகுதியில் கொண்டாடப்பட உள்ளது.

மேஜர் தயாபரன் கடந்த ஆண்டு வவுனியா நகரப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் இடம் பெற்ற நேரடி மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டமை தெரிந்ததே.

இவரின் நினைவு தினக் கொண்டாட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்ள உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

# ஆனந்தபுர அபிவிருத்திக்கு இரண்டரை லட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு இருபாலை ஆனந்தபுரம் பகுதி அபிவிருத்திக்கென இரண்டரை இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

மேற்படி ஒதுக்கப்பட்ட நிதி முழுவதும் அப்பகுதியில் உள்ள விதவைகளுக்கும், அபிவிருத்திக்கும் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் இப்பகுதியில் பாலர் பாடசாலை, பொதுக் கிணறு ஆகியன அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முதல் கட்டமாக அங்கு வசிக்கும் பத்து விதவைகளுக்கும் ஆளுக்கு மூன்று நல்லின ஆடுகளும் அவற்றை பராமரிப்பதற்கான கொட்டகைகளும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு விதவைகளும் ஆயிரத்து நூறு ரூபா பெறுமதியான பொருட்களை பெற்றுக்கொள்வர். (ச)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்'
முல்லைத் தீவுக் கிளை.

## திட்ட இணைப்பாளர்

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுள்ளோர் 20-07-91க்கு முன் விண்ணப்பிக்கவும். முல்லைத்தீவு மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர் விரும்பத்தக்கவர்.

கரைச்சிக் குடியிருப்பு
முல்லைத்தீவு,
08-07-91

கௌரவ செயலாளர்

(B/2795)

## நினைவு கூருகின்றோம்...

**1991-07-09**

1986 ஆம் ஆண்டு, கொக்கட்டிச்சோலையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீர மரணமெய்திய

❋ யோ. மதன் (அக்கரைப்பற்று)

1988 ஆம் ஆண்டு கிளிநொச்சி, இராமநாதபுரத்தில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்

1990 ஆம் ஆண்டு கல்லோயாவில் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்ட புகையிரதப் பகுதி ஊழியரான, சண்டிலிப்பாயைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் கொல்லப்பட்ட வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தமிழ்ப்பெண்

குரும்பசிட்டி கற்பகப் பிள்ளையார் கோயிலடியில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலினால் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

❋ மேற் குறிப்பிடப்பட்ட மாவீரர் மதன் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2788)

## சிந்தனைக்கு

ஓர் இனத்தின் தொன்மை அதன்
பாரம்பரியத்திலேயே தங்கியிருக்கிறது.

— வில்லியம் ஜான்லூயி

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 09.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
தூபெ.எண் 05

# தமிழ்ப் பாட நூல்களில் தமிழர் தொன்மை தேவை

"மொழி, நாடு, இனம் ஆகியவற்றின் ஒட்டு மொத்த விடுதலையே தமிழின விடுதலை" என்று விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் சுப்பிரமணியன் தமிழீழத்தின் இலக்கைத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார் இணை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ்வள ஆய்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் தெரிவித்தார்.

அதாவது தமிழ் இனத்தின் விடுதலை என்னும் போது தமிழ் மொழியும், மண்ணும் விடுதலை அடையும் போதுதான் ஏற்படும் என்பதாகும்.

இலங்கையைப் பொறுத்து சிறிலங்காப் பேரினவாத அரசாங்கம் குடியேற்றத்திட்டங்கள்மூலம் எமது மண்ணை ஆக்கிரமிக்கப் பார்க்கின்றது அதேவேளை இன ரீதியான படுகொலைகள் மூலம் எமது இனத்தைக் கருவறுக்க நினைக்கின்றது. அதேபோல் தமிழ் மொழியையும், அதன் தொன்மையையும், சிறப்பையும் பல்வேறு வழி முறைகளில் திட்டமிட்டு அழிக்க முற்படுகின்றது.

திரு. சுப்பிரமணியன் தமிழ் மொழியின் சிறப்பையும், தொன்மையையும் சீரழிப்பதற்குத் தமிழ் பாட நூல்களை எவ்வாறு சிறிலங்கா அரசாங்கம் பயன்படுத்துகின்றது என்பதையும் நேற்று முன்தினப் பேச்சில் தெளிவாகக் குறிப்பிட்டார். "தமிழ் மொழிக்கான பாடநூல்களில் முஸ்லிம்கள் தொடர்பான பாடங்களே பெருமளவில் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றன. தமிழ் மொழியின் சிறப்புக்கள், தொன்மைகள் முறையாக எடுத்து விளக்கப்படவில்லை. சிங்கள இனத்தின் உண்மைக்குப் புறம்பான வரலாறும் பௌத்த மதக்கருத்துக்களும் வலிந்து திணிக்கப்பட்டுள்ளன. பாடங்களை மாணவர்கள் மனதில் நிறுத்தக் கூடிய காலங்களில் தேவையற்றவற்றைத் திணித்து விட்டு தமிழ் இலக்கணங்களை உயர் வகுப்புக்களில் ஒட்டு மொத்தமாகத் திணித்து நிற்கும் நிலை போன்றவற்றைச் சுட்டிக்காட்டினார். மேலும் திருக்குறள் போன்ற நூல்கள் இருட்டடிப்புச் செய்யப்படுவதையும் எடுத்துக் காட்டினார்.

தமிழர் பாரம்பரிய பிரதேசங்களை அபிவிருத்தி என்ற போர்வையில் அபகரித்து வருவது போன்று தமிழ்ப் பாட நூல்களில் திரிபுகளையும், தேவையற்றவற்றையும் புகுத்துவதன்மூலம் தமிழ் மொழியின் சிறப்பை மாணவன் அறிய முடியாததோடு தமிழ்மொழியிலான ஆளுமையையும் இழக்கவேண்டி ஏற்படுகின்றது.

தமிழ் பிரதேச ஆக்கிரமிப்பிற்கு உதவியும், ஒத்தாசையும் பணம் மூலமும், பொருள்மூலமும் சிங்களவருக்கு வழங்கப்படுவது போன்று தமிழ் மொழி அழிவிற்கு இலவச பாடநூல் என்ற போர்வையில் தமிழருக்கே பாடநூல்கள் வழங்கப்படுகின்றன. இலவச பாடநூல்கள் எவ்வாறு தமிழ் மொழி அழிப்பிற்கு உதவுகின்றன என்பதை சுப்பிரமணியன் அவர்கள் தனது பேச்சின்போது சுட்டிக் காட்டினார்.

இலவசப் பாடநூல்கள்மூலம் சிறிலங்கா பேரினவாத அரசாங்கம் தான் விரும்பியதைத் தமிழ் மாணவர்கள் மீது திணிக்கின்றது. இந்நூல் தொடர்பான பாடத்திட்டங்கள் சிங்களப் பேரினவாத தேவைக்கேற்பத் தயாரிக்கப்படுகின்றன. தமிழ் மொழி தவிர்ந்த அநேக பாடநூல் புத்தகங்களின் மூலப் பிரதிகளே சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டு பின்னர் மொழி பெயர்ப்பிற்கு உள்ளாக்கப்படுகின்றன.

தமிழ் தேசிய இனத்தின் பாரம்பரிய பிரதேசம் எவ்வாறு குடியேற்றங்களின்மூலம் அழிக்கப்பட்டுவருகின்றதோ அதே போன்று தமிழர் தேசியம் என்ற, தமிழர் என்ற ஒருமைப்பாட்டை மொழியைச் சிதைப்பதன் மூலமும், அதன் வரலாற்றை மறைப்பதன் மூலமும் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இதன்மூலம் தமிழர் தேசிய இனம் என்பதையே கருவறுக்க நினைக்கின்றது சிறிலங்கா அரசாங்கம்.

இந்நிலையில் எமது விடுதலைக்கு எமது மண் பாதுகாக்கப்பட வேண்டியது போன்று எமது தேசியம் வரை எமது மொழியும் பாதுகாக்கப்பட வேண்டும். எமது மண் ஆக்கிரமிப்பில் இருந்து விடுதலை அடையும்வேளையில் எமது மொழி, கலை, பண்பாடு என்பனவும் அந்நியர் தாக்கத்திலிருந்து விடுதலை அடைய வேண்டும். அப்பொழுதே எமது விடுதலையின் முழுமையையும் நாம் அடைய முடியும்.

அணுஆயுத தயாரிப்பை

# பாகிஸ்தான் கைவிட்டாலே உறவுகள் மேம்பாடு அடையும்

: பி. வி. நரசிம்மராவ்

(ஹைதராபாத்)

பாகிஸ்தான் காஷ்மீரிய தீவிரவாதிகளுக்கு ஆயுதம் வழங்குதல், அணுஆயுதம்தயாரிப்பு ஆகியவற்றை கைவிட்டால் மட்டுமே பாகிஸ்தானுடனான இந்தியாவின் உறவுகள் மேம்பாடு அடையும் என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஹைதராபாத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பி. வி. நரசிம்மராவ் இந்த இரண்டு விடயங்களே இந்திய-பாகிஸ்தான் உறவுகளின் முக்கிய தடைக்கற்களாக இருக்கின்றன என்றும் இது குறித்து பாகிஸ்தானிய பிரதமர் நவாஸ் ஷெரீப் புதுடில்லி வந்தபோது எடுத்துரைத்ததாகவும் தெரிவித்தார்.

இந்தியாவின் அணிசேராக் கொள்கையில் எந்தவித மாற்றமும் இல்லை என்றும் உலகில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் முன்பு இருந்ததை விட தற்போது தான் அணிசேரா இயக்கத்தின் அவசியத்தை நிரூபிப்பதாக இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## 61ஈராக் ஏவுகணைகள் பாலைவனத்தில் அழிப்பு

(பாக்தாத்)

ஈராக்கின் ஸ்கட்கள் உட்பட 61 ஏவுகணைகள் வடஈராக்கிலுள்ள பாலைவனத்தில் ஐ.நா சபை மேற்பார்வையின் கீழ் அழிக்கப்பட்டன.

ஈராக்கின் ஏவுகணைத் திறனை அழிக்கும் மற்றொரு கட்டம் இத்துடன் நிறைவேறியுள்ளது என்று ஐ.நா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போர் நிறுத்த நிபந்தனைகளின் பிரகாரம் ஈராக் பெருநாச ஆயுதங்கள் அனைத்தையும் அழிக்க வேண்டும். ஈராக் அணு ஆயுத திறனை அடைவதற்கு முயலக் கூடாது என்பதாகும்.

கிறிஸ்தவ தலைவர்கள்

## போரை நிறுத்தி பேச்சை ஆரம்பிக்க கோரிக்கை

இலங்கை அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் சண்டையை நிறுத்தி நிபந்தனையின்றிப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென கிறிஸ்தவ தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை, பிலிப்பைன்ஸ், தென் கொரியா, தென்னாபிரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் திருச்சபைத் தலைவர்களும், மனித உரிமைகள் தொண்டர்களும் கலந்து கொண்ட இக் கூட்டம் கொழும்பில் கடந்த மே மாதம் நடந்தது. இதில் மேலும் கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களை நிறுத்தவும், உணவு, எரிபொருள், மருந்து என்பனவற்றின் விநியோகத்தை தாராளப்படுத்தவும், கண்டபடி கைது செய்வதை நிறுத்தவும் இச்சபை அரசைக் கோரியுள்ளது.

யூகோஸ்லாவியாவில்

## உறுதிப்பாட்டை ஏற்படுத்த இரு சாராரும் இணக்கம்

(லண்டன்)

யூகோஸ்லாவியாவில் நெருக்கடி நிலையை தவிர்த்தி உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு வழிகோலும் திட்டமொன்று சம்பந்தமாக இணக்கம் காணப்பட்டுள்ளது என பி.பி.சி அறிவித்துள்ளது.

ஐரோப்பிய பொருளாதார சமூக வெளிநாட்டு அமைச்சர்கள் நேற்று முன்தினம் யூகோஸ்லாவிய தலைவர்களுடனும், பிரிந்து சென்றுள்ள ஸ்லவேனியா, குரோசியா ஆகியவற்றின் தலைவர்களுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து இந்த இணக்கம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது என்றும் பி.பி.சி. தெரிவித்தது.

ஸ்லவேனிய குடியரசின் எல்லைகளை யார் காவல் செய்ய வேண்டும் என்ற பிரச்சினை தொடர்பாக தற்காலிக உடன்படிக்கை காணப்பட்டிருப்பதாகவும், யூகோஸ்லாவிய சமஷ்டி இராணுவத்திற்கும் ஸ்லவேனிய இராணுவத்திற்கும் இடையிலான யுத்த நிறுத்தத்தை மேற்பார்வை செய்வதற்கு ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளின் அதிகாரிகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## 16 வயதுச் சிறுவனின் 7,50,000 டாலர் மோசடி

(லண்டன்)

பிரிட்டன் முன்னாள் பிரதமர் மார்க்கிரேட் தட்சர் விலைக்கு வாங்கவிருந்த டல்விச் பகுதி மாளிகையை மோசடியாக ஈடுவைத்து 7,50,000 டாலர் பெற்ற லண்டன் மாணவன் ஒருவர் தற்போது பொலிஸ் விசாரணையில் உள்ளார்.

16 வயதான இம் மாணவன் பாடசாலையை விட்டுச் சென்றபின் டெலிபோன் இணைக்கப்பட்ட கார் சென்றதான் ஒரு 25 வயதான அதிக ஊதியம் பெறும் பங்குத் தரகர் என தொலைபேசி மூலம் மக்களை நம்பச் செய்து ஏமாற்றி வந்தான். பாரிசுக்கு தனது நண்பர்களுடன் விமானத்தில் சென்ற கட்டணம் மட்டும் 55 ஆயிரம் டாலர்களாகும். அதை அவன் இன்றும் செலுத்தவில்லை.

மார்ச் அக்லொம் என்ற இச்சிறுவன் தனது தந்தையின் கடன் சீட்டை (கிரடிட்கார்ட்) உபயோகித்து தனிப்பட்ட ஜெட் விமானங்களை அமர்த்திக் கொண்டு பெண் சிநேகிதர்களுக்கு உயர்தர சாம்பைனுடன் உயர்ந்த உணவு வகைகளை அளித்து வந்ததும், லண்டன் ஆடம்பரக் கடைகளில் பொருள்களை வாங்கியதுடன், தனது பெண் சிநேகிதிகளை ஆடம்பரமான பிரைட்டன் கடற்கரையிலுள்ள கிராண்ட் ஹோட்டலில் ஜனாதிபதிகள் தங்கும் அறைகளை வாடகைக்கு அமர்த்தி உபசரித்ததும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## கசிப்பு கண்டுபிடிப்பு

(நமது நிருபர்)

தாவடி, சிவசக்தி சனசமூக நிலையச் சுற்றாடலில் உள்ள ஒருவீட்டில் திடீர்சோதனையின்போது எட்டு லீற்றர் கசிப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

வேறொரு வீட்டிலும் கசிப்புக் காய்ச்சப் பயன்படும் உபகரணங்கள், பரல்கள் இடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## தவில் மேதைக்கு குருமஹாசந்நிதானம் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஈழநாட்டில் மட்டுமல்லாது தமிழகம், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் பெரும்புகழ் ஈட்டி விருதுகள் பல பெற்ற தவில் மேதை என். ஆர். சின்னராசாவின் மறைவு இசையுலகில் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும் என்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு மஹா சந்நிதானம் அவர்கள் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இவ்வனுதாபச் செய்தியில் அமரர்தவில்மேதை தட்சணாமூர்த்தியின் இடத்தை நிரப்பிக்கலைஞர்கள் உள்ளங்களில் தனியிடம்வகித்த தனிப்பிறவி சின்னராசா என்றால் அது மிகையாகாது என்பதுடன், அன்னாரின் ஜீவாத்மா பெறற்கரிய சாந்திநிலை எய்தவேண்டுமென நாமெல்லோரும் உளமாரப் பிரார்த்திப்போமாக என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5பேர் தற்கொலை முயற்சி

(யாழ்ப்பாணம்)

தற்கொலை முயற்சிகள் தொடர்ந்தும் அதிகரித்த நிலையிலேயே இருந்து வருகிறது. ஞாயிறுமட்டும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட ஐவர் யாழ். வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் குடும்பப் பிரச்சினைகளின் காரணமாகவே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது. (லோ)

## பாடுமீன் கழகம் வெற்றி பெற்றது

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம் உதை பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட "நொக்கவுட்" போட்டியில் பாடும்மீன் கழகம் முதல் சுற்றில் வெற்றி பெற்றுள்ளது.

பாடும்மீன் கழகத்திற்கும் கிறீன் பீல்ட் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற 90 நிமிட ஆட்டத்தில் பாடும்மீன் 5 நிமிடங்களில் மூன்று கோல்களை அடுத்தடுத்து போட்டு வெற்றியீட்டியது.

(42)

## திருமலையில் தமிழர் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் தமிழ்ப் பொதுமகனொருவர் சுட்டுக் கொலைப்பட்டதுடன் மற்றுமொருவர் கத்தியால் குத்திப் படுகாயப்படுத்தப் பட்டுமுள்ளார். அத்துடன் தமிழ்ப் பொதுமக்களுக்குச் சொந்தமான ஐந்து வீடுகளும் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை திருகோணமலை துறைமுகப் பகுதியில் நடந்துள்ளது அன்றைய தினம் திருமலையிலுள்ள சேருவிலவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரே இவ்வாறு பொதுமக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## காரைநகர் இராணுவம் தொடர்ந்து ஷெல் தாக்கு

(பொன்னாலை)

பொன்னாலை, மூளாய் போன்ற பொதுமக்களின் குடியிருப்புப் பகுதிகள் மீது காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் ஷெல் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 7 மணிமுதல் 8 மணி வரையும் தொடர்ச்சியாக இத்தாக்குதல் நடாத்தப்பட்ட அதே காலப்பகுதியில் வலந்தலைச் சந்தியில் தரித்து நின்ற இராணுவத்தினர் பொன்னாலைச் சந்தியை நோக்கி சரமாரியாக கலிபர் தாக்குதலை நடாத்திய வண்ணம் இருந்தனர்.

இதேதினம் காலை முதல் நண்பகல் வரையும் ஷெல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகமும் நடாத்தப்பட்டது.

(க)

## பாண்டிச்சேரியிலும் காலக்கெடு நீடிப்பு

புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலுள்ள இலங்கைத் தமிழர்கள் அயலிலுள்ள பொலிஸ் நிலையங்கள் அல்லது வெளிநாட்டவர்கள் பதிவு அலுவலகத்தில் தமது விபரங்களைத் தாக்கல் செய்வதற்கு கொடுக்கப்பட்ட காலக்கெடு இந்த மாதம் 13 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்நடைமுறை கட்டளைக்கு இணங்காதவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று புதுச்சேரி அரசு எச்சரித்துள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாக். ஆயுதக் கிடங்கில் வெடிவிபத்து; 18 படை பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடகிழக்கு எல்லை மாகாணத்தில் உள்ள வெடி மருந்துக் கிடங்குகளில் ஏற்பட்ட மற்றுமொரு குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 18 பாகிஸ்தானிய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 14 பேர் காயமுற்றனர்.

இந்த வெடி மருந்துக் கிடங்கில் குண்டு ஒன்றை வெடிக்காமல் செய்ய இராணுவத்தினர் முயன்ற போது இந்த வெடிச் சம்பவம் இடம் பெற்றது.

முன்னதாக மேமாதம் இதே வெடிக் கிடங்கில் வெடிவிபத்து ஏற்பட்டு 21 இராணுவத்தினர் இறந்ததும் குறிப்பிடத் தக்கது.

## அரச ஆஸ்பத்திரிகளில் மருந்துத் தட்டுப்பாடு நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் அரச வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

யாழ். போதனா மருத்துவமனை உட்பட மாவட்டத்தின் நகர மற்றும் கிராமிய வைத்தியசாலைகளிலும் மருந்துத் தட்டுப்பாடு தொடர்கின்றது.

யாழ். போதனா மருத்துவமனையில் ஒக்சிசன் உட்பட சத்திர சிகிச்சைக்குப் பயன்படும் மருந்து வகைகள் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து வகைகள் போன்றவை தீர்ந்துவிடும் நிலையில் உள்ளன.

இவ் வைத்தியசாலையின் உயர் அதிகாரி இவ்விடயம் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் ''இவ்வைத்தியசாலையில் எந்த மருந்து வகையும் 'தாமில்லும் கையிருப்பு' நிலையில் இல்லை எமக்கு மருந்து முற்றாக தீர்ந்து போகும் நிலையில் சில தொண்டர் ஸ்தாபனங்கள் உடனடி உதவி புரிவது உண்டு'' என்றார்.

இதேபோல பிராந்திய சுகாதார நிலையத்தின் கீழ் இயங்கும் மருத்துவ மனைகளிலும் போதிய மருந்துப் பொருள்கள் கையிருப்பில் இல்லை என்று அவ்வப்பகுதிகளில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மருந்துப் பொருள்களின் பற்றாக்குறை பற்றி மாத இறுதிக்குள் கொழும்பு விஜயத்தின்போது அத்தியாவசிய சேவைகள் திணைக்கள அதிகாரிகளிடம் எடுத்துக்கூற இருப்பதாக யாழ் அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (க)

## மேலும் 25 தொன் தங்கம் இந்தியாவில் அடமானம்

(புதுடில்லி)

இந்தியாவின் ரிசர்வ் வங்கி மேலும் இருபத்தைந்து தொன் தங்கத்தை லண்டனிலுள்ள பாங் ஒவ் இங்கிலாந்து வங்கிக்கு அனுப்பியுள்ளது. வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கு இந்தத் தங்கக்கட்டிகள் உத்தரவாதமாக அடமானமாக பயன்படுத்தப்படவுள்ளன.

இத் தங்கத்திற்குப் பதிலாக பாங் ஒவ் இங்கிலாந்து வங்கியும் பாங் ஒவ் ஜப்பான் வங்கியும் இந்தியாவிற்கு இருநூறு மில்லியன் டொலர்களை கடனாக வழங்கவுள்ளன.

சென்ற மாதம் இந்தியா சுவிற்சலாந்து வங்கிகளில் இருபது தொன் தங்கத்தை வைப்புச்செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## உண்ணாவிரதத்தை கைவிட ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சி சட்டப்பேரவை உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரனுக்கு வழங்கப்பட்ட தீர்ப்புக் குறைக்கப்பட்டுள்ளது இதையடுத்து பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் தனது காலவரையறையற்றஉண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஆளுநர் உரை ஆற்றுவதற்குத் தடை ஏற்படுத்தியதற்காக பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரனுக்கு வழங்கிய தண்டனையைக் குறைத்துப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா நேற்றுத் தீர்ப்பளித்தார். பண்ருட்டி ராமச்சந்திரன் சபை நடவடிக்கைகளில் மூன்று நாட்களுக்கு பங்குபற்றக் கூடாது என்ற தீர்ப்பு ஒரு நாளாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

பேரவைத் தலைவரின் தீர்ப்பை அடுத்து டாக்டர் ராமதாஸ் தனது காலவரையறையற்ற உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்தார் உண்ணாவிரதத்தை இனியும் தொடர்வதில் நியாயமில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

ராமதாஸ் எந்தச் சூழ்நிலையில் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்பதை விவரித்த செல்வி ஜெயலலிதா, இந்தப் பிரச்சினையால் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொதுச் சொத்துக்களுக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டது என்ற விபரத்தையும் வெளியிட்டார்.

## லோக்சபா இன்று ஆரம்பம்

(டில்லி)

இந்திய பத்தாவது லோக்சபையின் முதலாவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகும் நாளை சபாநாயகருக்கான தெரிவு இடம்பெறும். வெள்ளியன்று சபையில் நம்பிக்கை வாக்கெடுப்பு பிரேரணையின் மீது வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது இதேவேளை பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் எல். கே. அத்வானி எதிர்க் கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

தற்காலிக சபாநாயகர் இந்திரஜித்குப்தா கூட்டத்துக்கு தலைமை தாங்குவார்.

## உல்பா தீவிரவாதிகளுக்கு பொது மன்னிப்பு

அஸாம் அரசு சிறைவாசம் அனுபவிக்கும உல்பாப்போராளிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கத் தீர்மானித்துள்ளது.

மாநிலத்தில் சமாதானத்தையும், சகஜ நிலையையும் தோற்றுவித்து உல்பாப் போராளிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதுதான் பொது மன்னிப்பின் நோக்கம் என்று அஸாம் முதலமைச்சர் தெரிவித்தார்.

---

ராஜீவ்

யாவ என்ற இடமொன்றில் கைப்பற்றப்பட்ட புகைப்படங்களில் காயத்திரி என அழைக்கப்படும் தனுவின் புகைப்படமும் இருக்கக் காணப்பட்டதாம். இந்த வீட்டில் ரகீம் எனப்படும் சுரேந்திரா மறைந்திருந்து கூட்டுப்படை தலைமையக குண்டு வெடிப்புக்கு திட்டமிட்டாராம் இந்த வீட்டிலிருந்து கண்டெடுக்கப்பட்ட காயத்திரியின் புகைப்படமும் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர் எனக் கருதப்படும் தனுவின் புகைப்படமும் ஒத்திருக்கின்றதாம், இப் புகைப்படம் இந்திய உயர் ஸ்தானிகராலயமூடாக உடனடியாக இந்திய புலனாய்வுக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

---

சிறிலங்கா

கொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறிலங்காவின் பொருளாதாரத்தை முடங்க வைக்கும் நோக்குடன் செயற்படும் இரகசிய சர்வதேசக் குழு ஒன்றுடன் இவருக்குத் தொடர்பிருக்கலாம் என்று பொலிஸ் சந்தேகப்படுகிறது. கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்ட சீன முதலாளி ஜோசிம் மிற்கும் இவருக்கும் நெருக்கமான உறவுகள் இருப்பதாகவும் பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது

---

பலநாடு

வித்தொடர்புமிக்கவை என்று ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் புதனன்று தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஏனைய நாடுகளின் தூதுவர்களும் மனித உரிமைகள் தொடர்பாக எம்முடன் பேசுகிறார்கள் என்றுகூறிய அவர் அப்படியாயின் இவ்விரோனை விட மற்றவர்களே அதிகமாகப் பாதிப்புள்ளாகியிருக்க வேண்டும் என்றார்.

---

பலநூறு

விப் பணிப்பாளரிடமும், நிழல் நிர்வாகச் செயலகத்திலும், செஞ்சிலுவைச் சங்கத்திலும் கையளித்தனர்.

மகஜரைப் பெற்றுக் கொண்ட அரச அதிபர் திரு க. மாணிக்கவாசகர் தம்மால் இயன்றவரை இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக உறுதி வழங்கினார்.

யாழ் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் மகஜரைப் பெற்றுக் கொண்டபின் தொண்டர் ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றுகையில் நியமனத்திற்கு தகுதியுடையோரை நியமனமாக்குவதற்கு தம்மாலான நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறினார். (க)

---

முற்றுகையிட

பறிசாலில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றிவளைக்க வந்தபோது இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டனர். இம் மோதலில் புலிகள் தரப்பில் நிமால் என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார். இராணுவத் தரப்பில் சேதம் மேற்பட்டுள்ளதாயினும் சேத எண்ணிக்கை விபரம் இதுவரை கிடைக்கவில்லை.

---

கிராமப்புற

அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்தில் பேசும்போது கூறியுள்ளனர்.

மேலும் இவ்வாண்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

---

இலங்கைத்

கரும் சிவராஜன் தப்பிச் செல்ல உதவும்படி கேட்டிருந்தமையினாலேயே இவர் கைது செய்யப்பட்டிருப்பதாக பி.ரி.ஐ. செய்தி ஒன்று கூறுகின்றது இவரது பெயர் கே. சிவராஜன் அல்லது இராமசுவாமிநாதன் என்று கூறப்படுகின்றது.

இவர் பொலிசாரால் கைது செய்யப்படும்போது இவரிடம் பாஸ்போட் அல்லது அடையாள அட்டை எதுவும் இருக்கவில்லை. புலனாய்வு அதிகாரி தூதரக அதிகாரி சகிதம் இவர் விமான மூலம் புதுடில்லிக்கு கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது.

---

4வது

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவின் சிறிலங்கா இராணுவத்திற்கு ஒரு லட்சம் பேரைச் சேர்த்தல் என்னும் திட்டத்தின் பிரகாரமே இந்த நான்காவது படை அணி அமைக்கப்பட விருந்தது இப்படை அணி அமைக்கும் திட்டம் தொடர்பான நிதி ஒதுக்கீடு தொடர்பாக அப்பொழுதே அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா திறைசேரியுடன் முரண்பாடுகளைக் கொண்டிருந்தார்.

தற்பொழுதும் இந்த இராணுவ அணிக்கான செலவினங்களைக் காரணம்காட்டி நிதி அமைச்சும் இத் திட்டத்தை நிராகரித்துள்ளதாம்.

எதிர்பார்த்த அளவில் வெளிநாட்டு நிதியுதவி கிடைக்காமையினாலும் பொருளாதார விருத்திக்கென பெறப்பட்ட பணத்தை இராணுவச் செலவீட்டிற்கும் பயன்படுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்துமே சிறிலங்கா நிதி அமைச்சு இப் படையணி உருவாக்கத்திற்கான செலவை வழங்க முடியாமல் போய்விட்டது எனவும் தெரியவருகின்றது.

---


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சபாரத்தினம்

வே. சபாரத்தினம் (முன்னாள் கதிர்காமம் இராமகிருஷ்ண மிசன் மடத்தில கடமையாற்றியவர்) காலமானார். இவர் காலஞ்சென்ற களபூமி காரைநகரைச் சேர்ந்த மலேயன் பென்சனியர் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை, சிதம்பரம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரரும் திருமதி மங்கையர்க்கரசி (இங்கிலாந்து). திருமதி தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலாநிதி க. சற்குரு (இங்கிலாந்து), க. விஸ்வலிங்கம் (இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (09 - 07 - 91) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 11 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

374, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க. விஸ்வலிங்கம்.

(R/1528)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.